## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## MCOP. No.109/2023

PW : 2

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. புவனேஸ்வரி | க / பெ. | : | திரு. நடராஜன் |
| கிராமம் | : | வலங்கைமான் | தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | அரசு பள்ளி ஆசிரியர் | வயது | : | 52 |

**13.03.2026**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 2 ஆக சாட்சியமளித்துள்ளேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுவை தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தை ஏற்படுத்திய வாகனம் என் கணவர் பெயரில் உள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை என் கணவர் ஓட்டினார். விபத்து தொடர்பான முதல் தகவல் அறிக்கை என் கணவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என் கணவர் வாகனத்தை ஓட்டினார் என்று போலிசாரிடம் கூறினேன். விபத்து சமயத்தில் நானும் என் கணவரும் பேசிக்கொண்டே சென்றதால் என் கணவர் கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி மரத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

என் கணவர் மது போதையில் வாகனத்தை இயக்கினார் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் என் மாமியார் மற்றும் மாமனாரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இறந்தவர்கள் என் உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.13 11:56:19 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்